பக்கங்கள்: 05

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 23 சனிக்கிழமை 09.01.2021 கதிர் 296

## தமிழாராய்ச்சி மாநாட்டின் படுகொலைகளின் நினைவு நாளை காலை அனுஷ்டிப்பு

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் கடைசி நாளில் பொலிஸாரினால் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட ஒன்பது தமிழர்களுக்கான 47 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை 10ஆம் திகதி காலை 9:30 மணிக்கு

2

# முள்ளிவாய்க்கால் தூபி இடித்தழிப்பு இலங்கை அரசின் மாபாதகச் செயல்



## துணைபோன துணைவேந்தருக்கும் கண்டனம் தமிழக முதலமைச்சர் எடப்பாடி 'ருவிட்டர்' பதிவு

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக இடிக்கப்பட்டுள்ள செய்தி உலகத் தமிழர்களைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது. இலங்கை அரசின் இந்த மாபாதகச்செயலுக்கும் அதற்குத் துணைபோன யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் எனது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமி வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழ் உறவுகள் நினைவாக

5

## திங்கள் ஹர்த்தால்!

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குள் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நள்ளிரவு சமயம் திட்டமிட்டு அழிக்கப்பட்டமைக்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக தமிழர் தாயகம் எங்கும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கடையடைப்பு (ஹர்த்தால்) மேற்கொள்வதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் பல்கழைக்கழக மாணவர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகத்தினர் தீர்மானித்துள்ளனர்.

### முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தகர்ப்பு

# பல்கலை மானிய ஆணைகுழுவுக்கு எந்த வித சம்பந்தமுமே கிடையாது!

## ஏதும் தெரியாது எனக் கைவிரித்தார் அதன் தலைவர் துணைவேந்தர் தம்பாட்டிலேயே செய்திருக்கலாமாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.10

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழித்தமை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு எதுவுமே தெரியாதாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரே இதனைத் தெரிவித்திருக்கின்றார்.**

2

## கொரோனாச் சட்டத்தை ஆயுதமாக்கி போராட்டத்தை அடக்கியது பொலிஸ்

### துணிந்து நிற்கும் மாணவர்கள் சிலர்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி நேற்று இரவோடு இரவாக பல்கலைக்கழக நிர்வாகத்தால் அரசின் உத்தரவுக்கு இணங்க இடித்தழிக்கப் பட்டதை எதிர்த்து முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம்

2

## நினைவுத்தூபி இடிப்புக்கும் எமக்கும் தொடர்பு இல்லை!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப் பட்டிருந்த முள்ளிவாய்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டமைக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது.

- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2

## யாழ். பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பொலிஸ், இராணுவத்திடம் ஒப்படைப்பு

### மாணவர் ஒன்றியத்தினரிடம் கூறினார் துணைவேந்தர்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து தற்போது யாழ். பல்கலைக்கழகம் பாதுகாப்புத் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்புக்கு எதிராக 11இல் சென்னையில் பெரும் முற்றுகைப் போராட்டம்!

### தமிழ் உணர்வாளர்களுக்கு வைகோ அழைப்பு



இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்து இனப்படுகொலை செய்த சிங்கள அரசு, படுகொலையின் அடையாளங்கள் கூட இருக்கக்கூடாது என்பதற்காக மாவீரர் துயிலும் இல்லங்களை இடித்தது. இப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை இடித்துள்ளது.

2

## நினைவுத் தூபி இடிக்கப்பட்டமைக்கு கண்டனம் வெளியிடவேண்டும் மோடி

### தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வலியுறுத்து



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியும் இடிக் கப்பட்டமைக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்திட வேண்டும்.

2



## இழிவான செயலை ஒன்றைச் செய்துவிட்டு அதற்கு மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது

### நினைவுத் தூபி இடித்தழிப்புக் குறித்த விக்கி காட்டம்

தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக - அவர்களுடைய அன்புக்குரிய உறவுகளை நினைவு கூருவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டதுதான் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி.

2

## இழிவான செயலை ஒன்றைச் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பாதுகாப்புடன் இதனை நிர்மூலமாக்குவது தமிழ் மக்களின் உணர்வுகளை நசுக்குவதற்கு ஒப்பானது. அதேவேளை, இந்த நினைவுத் தூபி இடிப்பு விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் நடந்து கொண்ட முறைமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு இழிவான செயலை செய்துவிட்டு அதனை மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது உருவாகியிருக்கும் நிலைமைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அவர்களின் உறவுகளுக்காக அமைக்கப்பட்டது. மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் எனஅனைத்துத்தரப்பினரும்இணைந்தே இதனை அமைத்தார்கள். இதனை நிர்மூலமாக்க வேண்டும் என்ற அரசின் உயர் தரப்பினரின் அழுத்தங்களையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம், இராணுவப் பாதுகாப்புடன் இதனை அகற்றியிருக்கின்றது.

கடந்தகாலங்களில்தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அவர்கள் மீதான படுகொலைகள் போன்றவற்றின் நினைவுகளைமுழுமையாகஅகற்றிவிட வேண்டும் என்பது தற்போதைய அரசின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதன் ஓர் அங்கமாகத்தான் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

அரசு முன்னெடுக்கும் மிகவும் ஆபத்தான வேலைத்திட்டங்களில் இதுவும் ஒன்று. இது போன்ற பல திட்டங்கள் இந்த அரசிடம் இருக்கின்றன எனத் தெரிகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் தமது உணர்வுகளின் வெளிப்பாடாக, தமது அன்புக்குரிய உறவுகளை நினைவுகூர்வதற்காக அமைத்த நினைவுத் தூபியை ஒரே இரவில் அராஜகமாகத் தகர்த்தெறிவது என்பது தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டி நசுக்குவதற்கு ஒப்பானது.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்திவிட முடியாது. இது இராணுவ ஒடுக்குமுறையின் கோரத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றது. அத்துடன் எம்மவரின் பயத்தின் உச்சகட்டமாகவும் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் இராணுவம், அதிரப்படையினரைக் குவித்து துப்பாக்கி முனையில் மாணவர்களையும், பொதுமக்களையும் அச்சுறுத்திப் பணியவைப்பதானது இராணுவ அடக்குமுறையின் அசிங்க முகத்தையே வெளிப்படுத்துகின்றது.

இந்தப் பகுதியில் இராணுவத்தைக் குவிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. உடனடியாக இராணுவம் அங்கிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும். இப்போதுஇங்குநடப்பதுவெகுவிரைவில் சிங்களப் பகுதிகளிலும் ஏதோ ஒரு விதத்தில் நடைபெறப் போகின்றது என்பதைஎமதுசிங்களசகோதர, சகோதரிகள் உணர்வார்களாக!

அதேவேளை, இந்த நினைவுத் தூபி இடிப்பு விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் நடந்து கொண்ட முறைமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு இழிவான செயலை செய்துவிட்டு அதனை மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது. ஒரு தவறான காரியத்தை செய்யுமாறு மேலிடத்து உத்தரவு வருமானால், அதனை செய்வதில் உள்ள பிழை அல்லது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றை மேலிடத்துக்கு எடுத்துக் கூறி புரிய வைப்பது சம்பந்தப்பட்டவர்களின் கடமை. இது இந்த விடயத்தில் எந்தளவுக்கு நடைபெற்றிருக்கிறது என்பது எனக்கு தெரியாது.

எது எப்படி இருந்தாலும், இதுவரை காலமும் இந்த நினைவுத் தூபியை அகற்றுவதற்கு பல்கலைக்கழகத்தின் முன்னைய இரண்டு நிர்வாகங்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும் - என்றுள்ளது.

## நினைவுத் தூபி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு.

- இவ்வாறு தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிட்டரில்,

ஈழத் தமிழர்களின் பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியும் இடிக்கப்பட்டமைக்கு எனது கடும் கண்டனங்கள்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த அதிர்ச்சிச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்திட வேண்டும். இது உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு - பதிவிட்டுள்ளார்.

## முள்ளிவாய்க்கால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது கொடுமையிலும் கொடுமை ஆகும். நெஞ்சைப் பதற வைக்கும் இந்தக் கொடிய சம்பவத்தைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு என்னுடைய தலைமையில் நடைபெறும். தமிழ் உணர்வாளர்கள், ஈழத் தமிழ் உணர்வாளர்கள், கழகக் கண்மணிகள் அனைவரும் பங்கேற்கவேண்டும்என்றுவேதனையோடு வேண்டுகின்றேன்.

- இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் எழுப்பப்பட்டு இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூண் - நினைவு முற்றத்தை இரவு நேரத்தில் விளக்குகளை அணைத்து-விட்டு சிங்கள அரசின் ஏவுதலின் பேரில் இடித்துத்தகர்த்துள்ளனர். இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்து இனப்படுகொலை செய்த சிங்கள அரசு, படுகொலையின் அடையாளங்கள் கூட இருக்கக் கூடாது என்பதற்காக மாவீரர் துயிலும் இல்லங்களை இடித்தது. இப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை இடித்துள்ளது. இது கொடுமையிலும் கொடுமை ஆகும்.

ஈழத் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, சிங்கள இராணுவத்தை அங்கே குவித்துள்ள சிங்களப் பேரினவாத அரசு, தமிழ் இனத்தையே நிரந்தர அடிமைகளாக்கி அழித்தொழிக்கும் அக்கிரமத்தை தொடர்கிறது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சாட்சியாகும்.

உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் கூறிய, ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்து மண்ணில் புதைத்தாய்; இந்த மண்ணை எங்கே கொண்டுபோய் புதைப்பாய்? என்பதை நினைவில் கொள்வோம்.

ஈழத்தமிழர்கள், தாய்மார்கள், வயோதிபர்கள், சிறுவர்கள், குழந்தைகள் உட்பட அப்பாவி தமிழர்களை இலட்சக் கணக்கில் கொன்று குவித்த கொடுமையும், ஈழத் தமிழ்ப் பெண்களை பாலியல் நாசமாக்கிக் கொலை செய்ததும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை சென்று திரும்பிய 48 மணி நேரத்துக்குள் இந்த அராஜகத்தை சிங்கள அரசு செய்துள்ளது. இந்திய அரசு, கொலைகார சிங்கள அரசுடன் கொஞ்சிக் குலாவுவதால் நாம் என்ன செய்தாலும் உலகத்தில் கேள்வி கேட்பார் யார்? என்ற மமதையும், திமிரும் தலைக்கு ஏறி உள்ளது.

தமிழர்கள் சிந்திய இரத்தம் ஈழ மண்ணோடு கலந்திருக்கின்றது. ஈழத் தமிழர்களின் எலும்புகள் அந்த மண்ணோடு சேர்ந்துள்ளன. மடிந்த மாவீரர்களின் மூச்சுக் காற்று அங்குதான் உலவுகின்றது. ஈழத்தழர்களுக்கு நீதி கிடைக்காது; நடத்திய இனப்படுகொலைக்கும் எந்தக் கேள்வியும் இருக்காது என்று கொலை பாதக கோட்டாபய ராஜபக்ஷ அரசு மனப்பால் குடிக்கின்றது.

அனைத்துலகத்தின் மனச்சாட்சி செத்துப்போய் விட்டதா? கண்கள் குருடாகி, செவிகள் செவிடாகி விட்டதா? நடந்த அக்கிரமத்திற்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்காவிடில் கூட்டுக் குற்றவாளியாகவே தொடர்கின்றது எனக் குற்றம் சாட்டுவோம்.

சுதந்திரத் தமிழ் ஈழத்திற்குத் தீர்மானம் போட்ட அ.தி.மு.க. அரசு என்ன செய்யப் போகின்றது?

யாழ். பல்கலைக் கழகத்தில் மீண்டும் நினைவு முற்றமும் - நினைவுத் தூணும் அமைக்கப்பட வேண்டும். சிங்கள அரசு நடத்திய இனப்படுகொலைக்கு எதிராக முத்துக்குமார் உள்ளிட்ட 19 வீரத் தமிழர்கள் தீக்குளித்து மாண்டனரே, அந்த நெருப்பு நம்முடைய நெஞ்சிலே பற்றட்டும்.

இலங்கைத் தீவில் கோட்டாபய ராஜபக்ஷவின் கொலைகார அரசு, அனைத்துலக நீதிமன்றக் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். நடைபெற்ற அக்கிரமத்தைக் கண்டித்து சிங்கள அரசுக்கு இந்திய அரசு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

நெஞ்சைப் பதற வைக்கும் இந்தக் கொடிய சம்பவத்தைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு என்னுடைய தலைமையில் நடைபெறும். தமிழ் உணர்வாளர்கள், ஈழத்தமிழ் உணர்வாளர்கள், கழகக் கண்மணிகள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று வேதனையோடு வேண்டுகின்றேன் - என்றுள்ளது.

## யாழ். பல்கலைக்கழகத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் இடையில் இன்று நடைபெற்ற சந்திப்பின்போது துணைவேந்தர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதுள்ள அசாதாரண நிலையை அடுத்து பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புப் பொறுப்பு பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

அரச நிறுவனத்துக்கு எதிராக அசாதாரண நிலை ஏற்படும்போது அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு வழமையாக பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படும். அதேபோலவே யாழ். பல்கலைக்கழகத்துக்கும் தற்போதுள்ள அசாதாரண நிலையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே, எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஏற்படும் சம்பவங்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பேற்காது - என்றார்.

## நினைவுத்தூபி இடிப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை, யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் தீர்மானமாகும். அந்த விடயத்துக்கும் இராணுவத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவம் இந்த விடயத்தில் தலையிடமாட்டாது. பல்கலைக்கழகத்துக்குள் அமைதியின்மைஏற்பட்டு, அதைப்பொலிஸாரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத பட்சத்தில் மாத்திரமே இராணுவம் களமிறங்கும் - என்றார்.

## கொரோனாச் சட்டத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாச் சட்டத்தைக் காரணம் காட்டி - பயமுறுத்தி இன்று மதியத்துடன் கைவிடச் செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை வேளையில் பெரும் திரளானோர் பல்கலைக்கழகம் முன்பு ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைக்கண்டு அச்சமடைந்த பாதுகாப்புத்தரப்பினர் போராட்டம் செய்பவர்களை உடனடியாகக் கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர். அவ்வாறு செய்யாவிடின் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படும் எனவும், 14 நாட்கள் தனிமைடுத்தப்படுவார்கள் எனவும், தங்களிடம் வீடியோ பதிவுகள் இருக்கின்றன எனவும் ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் அறிவித்து பயமுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து பலரும் கலைந்து சென்றனர். அதன்பின்னர் கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரனமாக யாழ். பல்கலைக்கழகம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுள்ளது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தது.

ஆயினும், சில மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் எனவும் மாணவர் ஒன்றியம் மேலும் தெரிவித்தது.

அவ்வாறு போராடும் மாணவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளுவதற்காகப் பெயர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

## பல்கலை மானிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்த ஒரு நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை தொடர்பில் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரை ஊடகம் சார்பில் தொடர்பு கொண்டபோதே மேற்படி பதில் வழங்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணிவரை இப்படி ஒரு சம்பவம் நடந்ததே தமக்குத் தெரியாது என்று கைவிரித்திருக்கின்றார் அவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்குள் இருந்த எந்தவொரு நினைவுத் தூபியையும் இடிக்குமாறு மானியங்கள் ஆணைக்குழு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இதுவரை அறிவுறுத்தவோ அல்லது கடிதம் அனுப்பவோ இல்லை. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக துணை வேந்தர் தாம் ஓர் அரச சேவகர் என்ற வகையில் தமக்குரிய பணியை நிறைவேற்றியிருக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நினைவுத்தூபி இடித்து அழிக்கப்படும் வரையில் அது குறித்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கே எதுவுமே தெரியாது எனில் யாரின் விருப்பத்தை - அல்லது யாரின் எதிர்பார்ப்பை - துணைவேந்தர் நிறைவேற்றினார் என்ற நியாயமான கேள்வி சம்பந்தப்பட்ட தரப்புகளில் எழுப்பப்படுகின்றது.

## தமிழாராய்ச்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவிடத்தில் நடைபெறும். இதில் தமிழ் தேசிய உணர்வாளர்களையும், அரசியல் கட்சி தலைவர்களையும், அரசியல் கட்சி ஆதரவாளர்களையும் மற்றும் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அழைப்பு விடுத்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## துணைவேந்தரும் பதிவாளரும் மக்கள் மன்றத்தின் கூண்டில்!

இலங்கைத் தமிழருக்கு எதிரான பண்பாட்டுப் படுகொலைக் கொரூரத்தின் 46 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளையாகும்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நடத்தப்பட்ட குரூரத் தாக்குதல் ஒரு பண்பாட்டுப் படுகொலை நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. அந்தக் கொரூரத்தின் 46 ஆவது நினைவு தினத்தை நாம் அனுஷ்டிக்கும் தருணத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டது என்ற செய்தி இடிபோல வந்திருக்கின்றது.

இந்த நினைவுத் தூபி வெறும் சிமெந்தினாலும் கற்களினாலும் கட்டப்பட்ட ஒரு வடிவம் அல்ல. வெறும் அடையாளத் தூணுமல்ல. தமிழ் மக்கள் உள்ளத்துக்கு உணர்வுகளுடனும், எண்ணங்களோடும் கலந்து விட்ட ஒரு புனிதக் குறியீடு . அதற்கு உயிரில்லாவிட்டாலும், தமிழ் மக்களின் உள்ளத்துக் குமுறல்கள், ஆவேசங்கள் அதற்குள் பொதிந்து கிடக்கின்றன.

அதை உடைத்தவர்களுக்கு அதன் தாற்பரியம் புரியவில்லை. வெறும் சட்டத்திலும், எழுத்திலும், அதிகாரத்திலும் அந்தத் தூபி நோக்கப்பட்டதே தவிர, அதைத் தாண்டி அதற்குள் பொதிந்திருக்கும் அர்த்த பரிமாணம் அவர்களுக்குப் புரியவில்லை.

வெறும் சீலைத்தான். அதன் மேல் தேசியக் கொடியின் அடையாளங்கள் பொறிக்கப்படும் போது, அது ஒரு நாட்டின் கௌரவத்துக்குரிய சின்னமாக ஒரு கணத்தில் உயர்ந்து விடுகின்றது.

கருங்கல்லாக இருக்கும் வரை காலடியில் மிதிபடும் திடப்பொருள், சிற்பியினால் தெய்வ உருவமாக வடிக்கப்படும்போது அது வணக்கத்துக்குரிய தெய்வீகச் சிலையாகி விடுகின்றது.

அது போன்றதே யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குள் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியும்.

தன்னுடைய இன எழுச்சிக்காக – சுதந்திர வேட்கைக்காக – தமிழினம் கொடுத்த விலையின் அடையாளங்களில் ஒன்றே இடித்தழிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சின்னத்தை இடித்தழித்தமை மூலம் பேரினவாதம் தமிழருக்கு எதிரான குரூர வெறிச் செயலை அரங்கேற்றியுள்ளது என்றுதான் பலரும் கண்டிக்கின்றனர்.

அது இரண்டாவது விடயம்.

'எமது விரலைக் கொண்டே எங்கள் கண்களைக் குத்த வைத்திருக்கின்றது' பேரினவாதம் என்பதுதான் இதில் மிகவும் மனவேதனையான விவகாரமாகும்.

தன்னுடைய வெறும் பதவி நிலைக்காக இப்படி ஒரு குரூரத்தை துணைவேந்தரோ, பதிவாளரோ இலகுவில் செய்ய முடியாது என்பதுதான் உண்மை நிலை.

அப்படியாயின் எவ்வாறு இது சாத்தியமாயிற்று? ஏன் அப்படி ஓர் ஈனச் செயலை, பல்கலைக்கழகத்தை மூடிவிட்டு, இருட்டுக்குள் சத்தம் சந்தடி இல்லாமல் அதை அவர்கள் செய்தார்கள்? இப்படி ஒளிவு மறைவாக அவர்கள் ஓர் அழிவு வேலையைச் செய்வதற்குக் காரணமாக இருந்த பின்னணி யாது?

இதற்கும் தங்களுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்கின்றார் இராணுவத் தளபதி. தங்களுக்கு எதுவுமே தெரியாது என்று கைவிரிக்கின்றார் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்.

"இது, சட்டவிரோதக் கட்டமைப்பு. இதை இடித்தழிக்க வேண்டும்" என்ற கட்டாயம் எங்கிருந்து துணைவேந்தருக்கும், பதிவாளருக்கும் வந்தது?

நமது அரசியல் பிரமுகர்கள் சுட்டிக்காட்டுகின்றமை போல, துணைவேந்தர் பதவி என்பது அரசின் அடிவருடிக் கதிரை அல்ல. அரசியல் அழுத்தங்கள் கருதி, துணை வேந்தர் பதவியைத் துறந்தாலும் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியோ, கல்விசார் அதிகாரக் கதிரையோ பறிபோய் விடாது.

அவ்வாறிருக்கையில், இத்தகைய ஈனச் செயலை செய்ய முன்னர் குறைந்தபட்சம் இந்த உணர்வெழுச்சி அடையாளத்துடன் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்காவது ஒரு தகவல் தெரிவிக்கின்ற சமுதாயக் கடப்பாடு – கல்விமானுக்குரிய தார்மீகப் பொறுப்பு – தமக்கு இல்லை என்று கருதித்தான் துணைவேந்தரும், பதிவாளரும் இப்படி நடந்தார்களா?

பல்கலைகழக நிர்வாகத்தினால் 'சட்ட விரோதப் கட்டமைப்பு' என்று அர்த்தப்படுத்தப்படும் இந்தச் சின்னத்தைக் காப்பாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரும், மக்களும் சட்ட ரீதியாகவும் சமூகப் பொறுப்பு முறைமையிலும் நடவடிக்கை எடுக்க வாய்ப்பே வழங்கக் கூடாது என்ற ஒரே இலக்கோடு, காதோடு காது வைத்தால் போல – சத்தம் சந்தடியின்றி – அசுமத்தமே காட்டாமல் – இரவு வேளை பல்கலைக்கழகத்தை மூடி விட்டு ஒரேயடியாகத் தகர்த்தமைக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் உண்மைகள் என்ன?

துணைவேந்தரும், பதிவாளரும் சம்பளத்தை அரசாங்கத்திடம் பெற்றாலும், தமிழர் சமூகத்தின் கல்விக்கண்ணாக விளங்கும் யாழ் பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகள் என்ற சமுதாயப் பொறுப்பை ஏற்றிருக்கின்றமையால், இந்த நியாயமான கேள்விகளுக்கான பதிலை ஒளிவுமறைவின்றி தன்னிலை விளக்கமாக வழங்க வேண்டியவர்களாக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் பதில்தான் யாதோ?

## ஆட்சியாளர் இனவாதத்தைத் தூண்டினாலும் நாட்டின் மக்கள் இனவாதிகள் ஆகவில்லை!

### அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



ஆட்சியாளர்கள் தங்களின் குறுகிய கால அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள இனவாதத்தை தூண்டி வராலாம். ஆனால் எதிர்கால எமது பிள்ளைகள் இந்த இனவாத பொறிக்குள் சிக்கிக்கொள்வதை நீண்டகாலத்துக்கு தடுக்க முடியாதுபோகும். அதனால் இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய கொவிட்19 ஐ கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் பலவீனம் தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஆட்சியாளர்கள் எப்போதும் இனவாதத்தை தூண்டவே நடவடிக்கை எடுத்து வருகின்றனர். நாட்டில் பிரச்சினை ஒன்றுவரும்போது இனவாதத்தை தூண்டி அதனை மறைக்கவே முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதன் விளைவே 30 வருட யுத்தத்துக்கு காரணமானது. அதனால் நாங்கள் இழந்தவை எண்ணிலடங்காதவை. அதனால் அவ்வாறானதொரு நிலைமை இனி எமக்குத் தேவையில்லை.

ஆனால் தற்போதும் கொவிட் பிரச்சினைக்குள்ளும் ஆட்சியாளர்கள் இனவாதத்தைத் தூண்ட ஆரம்பித்திருக்கின்றனர். ஆட்சியாளர்கள் மாத்திரமல்லர், அரசியல் வியாபாரிகளும் தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள இனவாதத்தைத் தூண்டி வருகின்றனர். ஆட்சியாளர்கள் இனவாதத்தை தூண்டினாலும் நாட்டு மக்கள் இனவாதிகளாகவில்லை. ஆட்சியாளர்கள் தங்களின் குறுகிய கால அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள இனவாதத்தை தூண்டி வராலாம். ஆனால் எதிர்கால எமது பிள்ளைகள் இந்த இனவாத பொறிக்குள் சிக்கிக்கொள்வதை நீண்டகாலத்துக்கு தடுக்க முடியாதுபோகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் கொவிட்டில் மரணிக்கும் சடலங்களை எரிப்பதா? அடக்குவதா? என்ற பிரச்சினை எழுந்திருக்கின்றது. ஆரம்பமாக நாங்கள் ஒரு சமூகத்தின் மத நம்பிக்கையை மதிக்கவேண்டும். சடலங்களை எரிப்பதால் முஸ்லிம்கள் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றமையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன் பின்னரே சடலங்களை அடககம்செய்வதா? தகனம்செய்வதா? என்ற தீர்மானத்துக்குச் செல்லவேண்டும். ஆனால் முஸ்லிம்களின் பொதுவான நம்பிக்கையை நிராகரித்துக் கொண்டே அரசாங்கம் செயற்படுகின்றது.

அரசாங்கம் கொண்டுவந்த 20 ஆவது திருத்தத்துக்கு ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீனின் கட்சி உறுப்பினர்கள் ஆதரவளித்தனர். அப்போது கைதட்டி அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர்களின் பிரச்சினையைத் தெரிவிக்கும்போது இனவாதமாகப் பார்க்கின்றனர். இது நியாயமா? அதனால் 20 இற்கு வாக்களித்த முஸ்லிம் உறுப்பினர்கள் வெட்கப்படவேண்டும். அத்துடன் நாட்டில் மீண்டும் இனவாத்தை தூண்டும் பிரியத்தனத்தை இன்று அரசாங்கத்தில் இருக்கும் ஒரு குழு மேற்கொண்டு வருகின்றது. அது தொடர்பான சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அதனால் ஆட்சியாளர் தங்களின் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள இனவாதத்தை தூண்டினாலும் இதன் பாதிப்பு எதிர்காலத்தில் பேரழிவை ஏற்படுத்தும். - என்றார்.

## கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பிணையில் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜன. 09

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் பிணையில் செல்ல யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த இரு மாணவர்களும் இன்று யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ். பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அத்துமீறி பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்தமை மற்றும் கலகம் விளைவித்த குற்றச்சாட்டுகள் மாணவர்கள் இருவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டன.



இருப்பினும் மாணவர்கள் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன், நடந்தவற்றை மன்றுரைத்து பிணை விண்ணப்பத்தை முன்வைத்தார்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## காலியில் சிறுமி ஒருவர் மீது துஷ்பிரயோகம் இளைஞன், தாய் உட்பட நான்கு பேர் கைது!

காலி - போத்தலை பகுதியில் சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவருக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் அவரது தாயார் மற்றும் அயல் வீட்டு பெண்ணொருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போத்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று சனிக்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கோனபுர பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கினர் என அவரது தாயார், அவரது உறவினர் ஒருவரும் அயல் வீட்டு பெண்ணொருவர் மற்றும் ஓட்டோ சாரதியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காசியதெனிய பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர், சந்தேக நபரான இளைஞர் பாடசாலை மாணவியான சிறுமியை அழைத்துச் சென்றுள்ளமையுடன், பாணந்துறை பகுதியில் வாடகைக்கு ஒரு வீட்டைப் பெற்றுக் கொண்டு அங்கு இருவரும் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றமையை அடுத்தே பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இன்று சனிக்கிழமை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதற்காக உதவி ஒத்தாசைகளை வழங்கியதாக கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவரை கைது செய்வதற்காக பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

# அபராதம் செலுத்த முடியாதுள்ள அனைத்து கைதிகளும் விடுதலை

## சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிப்பு

சிறைச்சாலைகளுக்குள் நெரிசலைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, அபராதம் செலுத்த முடியாத அனைத்துக் கைதிகளும் இன்று விடுவிக்கப்படுவார்கள் எனசிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளைநாடு முழுவதும் உள்ள சிறைகளிலிருந்து கடந்த பல வாரங்களில் 10 ஆயிரத்து 65 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் 60வீதமானவர்கள் போதைப்பொருள்தொடர்பானகுற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டவர்கள் என்றும் அவர்கள் சுகாதார நெறிமுறைகளைத் தொடர்ந்து விடுக்கப்பட்டனர் எனவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இருப்பினும், விடுவிக்கப்பட்ட கைதிகள் இரண்டு வாரங்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் சிறைச்சாலைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த இரண்டு மாதங்களில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா தொற்று உறுதியான நோயாளிகளும் ஐந்து இறப்புகளும் சிறைச்சாலையில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தயாசிறி ஜயசேகரவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவுக்கு கொரோனா தொற்று உறுதிடுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, அவருடன் நெருங்கிய தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவரது அலுவலகத்தில் தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தாண்டு தினமான கடந்த முதலாம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தயாசிறி ஜயசேகர கலந்துக்கொண்டிருந்தார்.

அந்த நிகழ்வில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், கடந்த இரண்டு தினங்கள் நாடாளுமன்ற அமர்விற்கு அவர் வருகைத்தரவில்லை என்பதுடன், ஆளும் கட்சிக் கூட்டத்திலும் அவர் கலந்துக்கொண்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத்து புகழ்பூத்த இயக்குநர் கேசவராஜன் காலமானார்!



கொழும்பு, ஜன.09

ஈழத்து திரைப்பட இயக்குநரான நவரட்ணம் கேசவராஜன், இன்று (சனிக்கிழமை) அதிகாலை நோய் காரணமாக காலமானார்.

அரியாலையை பிறப்பிடமாக கொண்ட கேசவராஜன், கண்டியில் தனது கல்வியை தொடர்ந்தார். பின்னர் சினிமா மீதான ஈர்ப்பால் இயக்குநரானார்.

1986 ஆம் ஆண்டு தாயகமே தாகம், மரணம் வாழ்வின் முடிவல்ல போன்ற படங்களை இயக்கினார். அதன் விளைவாக தேசிய தலைவரின் பாராட்டைப் பெற்றமையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் உள்வாங்கப்பட்டார்.

பல வீதி நாடகங்கள், மேடை நாடகங்களைத் தயாரித்து வழங்கிய இவர் பிஞ்சுமனம், திசைகள் வெளிக்கும், கடற்புலிகளின் 10 ஆண்டு நிறைவை முன்னிட்டு கடலோரக் காற்று, அம்மா நலமா போன்ற படங்களை இயக்கியுள்ளமையுடன் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் வலியை உணர்த்தும் அப்பா வருவார் போன்ற பல குறும்படங்களை இயக்கியும் நடித்தும் உள்ளார்.

இறுதியாக அவர் பனைமரக்காடு திரைப்படத்தை இயக்கி வெளியிட்டார். அவரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை, அன்னாரின் தற்காலிக முகவரியான 31, மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

# வவுனியா சாலையின் உதவி முகாமையாளரை இடமாற்றியமைக்கு எதிராக பணிப்புறக்கணிப்பு!



வவுனியா போக்குவரத்து சபையின் வவுனியா சாலையின் உதவி சாலை முகாமையாளரை இடமாற்றம் செய்கின்றமைக்கு எதிராக வவுனியா போக்குவரத்து சபையின் சாரதிகள், காப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இன்று (சனிக்கிழமை) காலையில் இருந்து பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எந்தவித பிழையோ அல்லது காரணமோ இல்லாமல் அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சாலை முகாமையாளரிடம் கேட்டபோது தொழிலாளர்கள் கூறியமையாலேயே அவரை மாற்றினர் எனத் தெரிவித்தார். நாம் அவ்வாறு எதனையும் சொல்லவில்லை.

தற்போதைய சாலையின் முகாமையாளர் ஏற்கனவே இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர். எனவே இவர் இங்கு தொடர்ந்து பணிபுரிந்தால் ஒவ்வொரு தொழிலாளரையும் பழி வாங்கிக்கொண்டே இருப்பார். அவர் ஊழியர்களைத்தகாதவார்த்தைகளால் பேசுகிறார். எனவே அவர் இங்கிருந்து வெளியேறினால் இந்த நிமிசமே நாம் பணி செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

எமது சாலையில் நிதியே இல்லை. பஸ்களுக்கு டீசல் அடிப்பதற்குக் கூடப் பணம் இல்லாத நிலைமை நீடித்துள்ளது. சரியான நிர்வாகமும் முகாமைத்துவமும் இல்லாமையே இதற்குக் காரணம். இப்போது இருப்பவருக்கு நிர்வாகமே தெரியாது.

இந்த விடயங்கள் ஊழியர்களான எங்களையே பாதிக்கிறது. எனவே இடமாற்றம் செய்யப்பட்ட உதவி சாலை முகாமையாளரின் இடமாற்றத்தை இரத்துசெய்து தற்போது இருக்கும் முகாமையாளரை மாற்றவேண்டும். - என அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை பணிப்புறக்கணிப்பு காரணமாக பயணிகளும் அசௌகரியங்களைசந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778




# கட்டுப்பாட்டை இழந்து கால்வாயில் விழுந்தது பஸ்; 30 பேர் படுகாயம்!

பொலன்னறுவை புலஸ்திபுர பகுதியில் பராக்கிரம சமுத்திரத்தின் கிளைக் கால்வாயில் பஸ் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் சுமார் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆடை தொழிற்சாலையொன்றின் ஊழியர்கள் சிலரை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே இவ்வாறு பராக்கிரம சமுத்திரத்தின் கிளை கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. பஸ் சாரதி, கட்டுப்பாட்டை இழந்தமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும், விபத்தில் காயமடைந்தவர்கள் பொலன்னறுவை மற்றும் புலஸ்திபுர வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் புலஸ்திபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் தூபி ……

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி நேற்றிரவு இடித்துத் கர்க்கப்பட்டது. இந்தச் சம்பவத்துக்குத் தமிழகத் தலைவர்களும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்,

இந்தநிலையில், முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்புக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனது ருவிட்டரில்,

இலங்கை, முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப் போரில் இரக்கமின்றி கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இரவோடு இரவாக இடிக்கப்பட்டுள்ள செய்தி பேரதிர்ச்சி அளிக்கின்றது.

உலகத்தமிழர்களைப் பெரும்வேதனையில் ஆழ்த்தியுள்ள இலங்கை அரசின் இந்த மாபாதக செயலுக்கும் அதற்குத் துணைபோன யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் எனது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்று பதிவிட்டுள்ளார்.

இதேபோல், தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தனது ருவிட்டரில் -

இலங்கைப் போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலையில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி இரவோடிரவாக இடித்துத் தகர்க்கப்பட்டுள்ளமை மிகுந்த அதிர்ச்சி அளிக்கின்றது.

ஈழப்போரில் ஈவு இரக்கமின்றி கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட மக்களுக்குநீதிகிடைக்கப்போராடிக்கொண்டிருக்கின்ற வேளையில், தமிழர்களின் உணர்வை மேலும் ரணப்படுத்தும், இனவெறியினரின் இந்த இழிசெயல் கடும் கண்டனத்துக்குரியது. ஏற்றுக்கொள்ள முடியாத இந்தக் கொடுஞ்செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்று பதிவிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 9.01.2021இல் வெளியிடப்பெற்றது.